# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,230 — 1936 ம் ௵ ஆடி௴ 3 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 1,314 (கேகாலே).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1936 ம் ௵ (ஜூலை) ஆடி௴ 3 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய **காணி**யென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**1936** ம் ௵ (ஜூன்) ஆனி௴ **26** ந் தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப் பகுதிக் கந்தோரிற் கொடுக்கப்பட்டது.

சி. எவ். இங்கிள்டௌ,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒபிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

**(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித்துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லேகட்குட்படவிருக்குங் காணித்துண் டெதுவாயினும் மேற்படி யறிவித்தலின்கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாததுமன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.**

அட்டவணை.

சபறகமுவ மாகாணம், கேகாலே டிஸ்திறிக், மூன்று கோறளைகள், அத்துலுகம்கோறளையைச்சார்ந்த சிவன்ஒழிபாதமலேக் காட்டிலுள்ள கீழ்க்காணுங் காணித்துண்டுகள் : கீழே மிக விபரமாய் விளக்கப்பட்டிருக்கிறது :—

1 ம் பகுதி.

ரோப்போ பிரதமபடம் நி. 1.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | ஹெறலுவத்தைமூக்கலான, கிறிவெலஹின்னே மூக்கலான, கலுவெல்கெலேமூக்கலான, மூவஹிற்றிகலஉடமூக்கலான, துங்காலேமூக்கலான, கம்பறங்கதென்ன, மாகல்கங்கை, நாயேகங்கை, வெலிதுடுவேமூக்கலான (காடு, சேனே, சிற்ருறுகள் பாதைகள் முதலியன) .. | ..11,'872 3 8 |

எல்லேகள் பின்வருமாறு :—

வடக்கு-கல்வத்துறைகெலே, தெலிஹிகல கிராமங்களின எல்லேகள், மத்திய மாகாணத்திலுள்ள 6 ம் ரோப்போ பிரதமபடத்தின் எல்லே ;

கிழக்கு : மத்திய மாகாணத்திலுள்ள 6 ம், 7 ம் ரோப்போ பிரதமபடங்களின் எல்லேகள் ;

தெற்கு : 2 ம் ரோப்போ பிரதமபடத்தின் எல்லே, அடவிகந்த பெலாந்தகந்த, அடவிகந்த கங்கைபொட, முறுதெட்டுகந்தை, கங்கைபொட முறுதெட்டுகந்தை கிராமங்களின் எல்லேகள் ;

மேற்கு : மாகலே கிராமத்தின் எல்லே.

2 ம் பகுதி.

1 ம் நி. ரோப்போ பிரதமபடத்துக்கு 1 ம் இன்செற்.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | காம்பறங்கதென்ன .. | .. 0 2 0 |

எல்லேகள் பின்வருமாறு :—

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு : 1 ம் நி. ரோப்போ பிரதமபடத்திலுள்ள 1 ம் காணித்துண்டு.

(கேகாலே நி. உ. 10—1936.]

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பளையில் கடுகனுவ ரேட்டில் ஓர் பகிரங்கக் கக்கூசுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 345. குறிச்சி—கம்பளை நகரசங்க எல்லேக்குள், கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கடுகனுவ ரேட்டில் 26M ம் வரிப்பண இலக்கத்தையுடைய பாங்கவுஸ் வீட்டின் பகுதி | தோட்டம், 15 வயசுள்ள 2 தென்னமரங்களும், 10 வயசுள்ள 3 கமுகமரங்களுமுண்டு, காணில் பகுதியுமடங்கியிருக்கிறது | எம். பீ. எம். நாராயணன் செட்டியார், அம்பகமுவ ரேட், கம்பளை | 0 0 5·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஸ்ரீ ஆகஸ்ட் மாசம் 3 ந் தேதியிலன்று 9 மணிக்கு கம்பளை நகர சங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ ஜூன் (ஆனி)மீ 25 ந் உ.

ஆர். மொனிபெனி,
உப அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கீரிமலையில் வண்டில்களும் பஸ்களும் விடுவதற்கு ஓர் காலை திறப்பதாகிய பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 1,081. குறிச்சி—கீரிமலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மாதகல்குறவில்புது காடு | ஏறக்குறைய 15 வயதுள்ள 5 வேப்ப மரங்களுள்ள பாழ்நிலம் | தெல்லிப்பளை வட மேற்கிலிருக்கும் எஸ். சங்கரப்பிள்ளை பெண் செல்வநாயகிப்பிள்ளை | 0 3 2·15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ ஆடி மாசம் 27 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணியைப்பற்றிய உறுதிகளைக் கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ஸ்ரீ ஆனிமீ 22 ந் உ.

ஈ. ரீ. டைசன்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வவுனதீவில் ஓர் கிணறு கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 227. குறிச்சி—வவுணதீவு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | தூணடிவயல் | நீர்மடு (வேளாண்மை வயலோடு சேரப்பட்ட) | இராமலிங்கம் பரமநாதன் | 0 0 1·62 |
| 2 | ஷை | வேளாண்மை வயல் | ஷை | 0 0 3·70 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ ஆடி மாசம் 27 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ ஆனிமீ 29 ந் உ.

சி. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதாக்கட பெண் பாடசாலை கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 443. குறிச்சி—வடமேல் மாகாணத்தில், குருனுக்கல் டிஸ்திறிக்கில் தம்பதெனிஹற்பத்துவில் உடப்பொல ஒத்தொட்ட கோறளை மேற்கில் உள்ள ஏதண்டுப்பிற்றிய கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொலொன்கொல்லேஹேன | சேனை (ஒரு தென்னைமரம் உள்ளது) | வதாக்கடையைச்சேர்ந்த பீ. ஏ. ஐசாஉம்மா | 0 3 20·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 8 ந் தேதியிலன்று காலை 9·30 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியினுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 26 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருனுக்கல் டிஸ்திறிக்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தா லறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1936 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1937 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1936 ம் ஆண்டு ஆடிமீ 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி யளவில் ஏற்கப்படும்.

(1) பண்ணைத்துறை. (2) அராலித்துறை.
(3) காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டியதற்கு அத்தாட்சியாக் பெற்றுக்கொண்ட றிசிட்டுடன் ஒப்பந்தப்பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப் போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினுல் ஒப்பந்தக் கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித் தொகையின் பத்திலொரு பங்கின் பேரால் கட்டிய பணமும் இழந்து போவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யத் தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும்.

தப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக்காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்குப் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது. மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்பட வேண்டும்.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப்பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றி லொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

5. முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

6. பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத் தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

8. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்து ஏசண்டு அவர்களுக்கு உண்டு.

ஈ. ரீ. டைசன்,
கவண்மேந்து ஏசன்று.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ம் ஆண்டு ஆனி ௴ 29 ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.